**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.158/2022**

**Name** : Karthikeyan
**Father/Husband Name** : Durairaj

**Age** : 56

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.10.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: 02.40 p.m**

**1 மற்றும் 2 வது பிரதிவாதிகள் தரப்பில் விசாரணை**

நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் பாக பிரிவினை கேட்டுள்ளேன். நான் தாவாவில் குறிப்பிட்டுள்ள அசையும் மற்றும் அசையாத சொத்துகள் எல்லாம் யாரும் உரிமையானது என்றால் துரைராஜ முதலியார் மற்றும் தனம்மாள் ஆகிய என் பெற்றோர்களுக்கு உரிமையானது. தந்தைக்கு துரைராஜ் என்பவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி தனபாக்கியம்மாள், 2 வது மனைவி பெயர் வசந்தா. வசந்தா என்பவர் தான் இந்த வழக்கில் முதல் பிரதிவாதி என்றால் சரிதான். தனபாக்கியம்மாள் பெயரில் சொத்து வாங்குவதற்கு அவருக்கு வருமானம் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

தனபாக்கியம்மாள் பெயரில் பெயரளவில் வாங்கப்பட்டது என்றாலும் அனைத்து சொத்துக்களும் துரைராஜ் என்பவரின் சொந்த உழைப்பில் வாங்கப்பட்டது என்றாலும் சரிதான். துரைராஜ் என்பவர் உயிருடன் இருக்கும் வரைக்கும் 3 பேருந்துகள் வைத்து இயக்கி வந்தார் என்றால்

சரிதான். அந்த பேருந்து எண். TN 23 AJ 3555. துணை பேருந்து TN 23 J 4055 பதிவு எண் கொண்ட பேருந்து வேலூர் டூ R.K. பேட்டை என்ற தடத்தில் இயக்கி வந்தது. TN 50 S 5060 என்ற பேருந்து காட்பாடி டூ பாகாயம் தடத்தில் பாலகணேசர் என்ற பெயரில் இயக்கி வந்தது என்றால் சரிதான். அதே பாலகணேசர் பெயரில் TN 23 TR 0106 என்ற பேருந்து மட்டும் துரைராஜ் என்பவர் காட்பாடி டூ பாகாயம் மற்றும் விளாங்காடு தடத்தில் இயக்கி வந்தார் என்றால் சரிதான். மேலும் tourist வாகனம் வைத்து அவரே இயக்கினார். அவர் வேறு என்ன தொழில் செய்து வந்தார் என்றால் என் தந்தை automobiles mechanic ஆக இருந்தார். பேருந்து, கார், லாரி, வேன் ஆகியவற்றை பழுது பார்க்கும் தொழில் செய்து வந்தார்.

இதன் முன்னிலைக்கு வந்த வருமானத்தில் தான் அவரே வாங்கிய அட்டவணை சொத்துக்களை முதல் மனைவி பெயரில் எழுதினார் என்றால் சரிதான். C Schedule சொத்துக்கள் துரைராஜ் என்பவர் மேல் உள்ளது என்றால் சரிதான். துரைராஜ் முதலியார் என்பவருக்கு இரண்டாவது மனைவி வசந்தா என்றாலும் முதல் மனைவிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் பிள்ளைகளே இல்லை. இரண்டாவது மனைவி வசந்தா என்பவருக்கு 3 பிள்ளைகள். அவர்கள் என் அக்கா தேவசேனா, நான், நவீன்குமார் ஆவர். என் தந்தை, நான், என் தாயார், என் தந்தையின் முதல் மனைவி, என் சகோதர சகோதரிகள் அனைவரும் ஒரு குடும்பமாக தோட்டபாளைய வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். தனபாக்கியம் இறக்கும் வசந்தாம்மாளுடன் தோட்டபாளையம் வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். வசந்தாம்மாளும் தனபாக்கியம்மாளும் உடன் பிறந்தவர்கள் இல்லை.

துரைராஜ் என்பவர் 29.01.2018 அன்று இறந்தார். அவர் இறப்பதற்கு

முன்பு என் பெயரில் உயில் எதுவும் எழுதினாரா என்றால் இல்லை. மற்ற என் சகோதர சகோதரிகள் மற்றும் தாயார் பெயரிலும் எதுவும் எழுதவில்லை. நான் மருத்துவர் என்பதால் வேலூரில் இல்லாமல் வெளியூரில் இருந்திருக்கிறேன் என்றால் வேலூரிலும் இருந்திருக்கிறேன், வெளியூரிலும் இருந்திருக்கிறேன். துரைராஜ் என்பவர் இறக்கும்போது அவருடைய வயது 78 இருக்கும்.

அந்த வகையில் நான் வெளியில் இருந்ததால் நவீன்குமார்–3 வது பிரதிவாதிதான் என் தந்தையுடன் சேர்ந்து கவனித்து வந்தார் என்றாலும் உதவி செய்து வந்தார் என்றாலும் அவர் உதவி தான் செய்து வந்தார், கவனிக்கவில்லை. 3 வது பிரதிவாதி நவீன்குமார் வீட்டின் கடைசி பிள்ளை என்பதால் அவர் மீது உள்ள பாசத்தில் ஒரு பேருந்து வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல, தந்தை பெயரில் இருந்ததை 3 வது பிரதிவாதிக்கு பெயர் மாற்றம் செய்துள்ளார்.

துரைராஜ் என்பவர் சம்பாதித்த சொத்து இருக்கும்போது என் அம்மா மற்றும் 3 பிள்ளைகள் மொத்தம் 4 பேர் வாரிசுகள் என்றால் சரிதான். அவ்வாறு இருக்க தாவா சொத்துக்களை நான் 3 ஆக மட்டும் பிரிக்க வேண்டும் என்று கேட்டுள்ளது தவறு என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும் வசந்தம்மாள் என்பவரும் நேரடி வாரிசு என்பதால் அவருக்கும் ஒரு பங்கு உள்ளது என்றால் என்னை பொருத்தவரை இல்லை.

தாவா அட்டவணை சொத்துக்கள் எதுவும் என் தாத்தா சொத்து இல்லை என்றால் சரிதான். எனவே என் தந்தை சம்பாதித்ததால் வசந்தாம்மாள் என்பவருக்கு பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வசந்தம்மாளும் தேவசேனாவும் சேர்ந்து தாக்கல் செய்த பதிலை படித்த

பார்த்தேனா என்றால் பார்த்தேன். பிரதிவாதிகள் 1 மற்றும் 2 ஆகியோர்கள் தாவா சொத்தை 4 ஆக பிரித்து அதில் 2 பாகத்தை அவர்களுக்கு ஒதுக்க நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார் என்றாலும் அது பற்றி தெரியுமா என்றாலும் தெரியும். நான் தெரிந்தபிறகும் நான் அதை மறுத்து நான் பதில் போடவில்லை என்றால் சரிதான். நான் தாவாவில் சொல்லியுள்ளது போல் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் 3வது பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து பேருந்து பெர்மிட் 3வது பிரதிவாதி பெயருக்கு மாற்றுவதற்கு துணை போயிருந்தார்கள் என்று சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்று சொன்னால் சரியல்ல.

தனபாக்கியம்மாள் என்பவர் 3வது பிரதிவாதிக்கு ஒரு பெய்யான உயில் தேதி–16.07.2010 ல் எழுதி வைத்துள்ளார் என்று சொல்கிறேன் ஆனால் அது போல் எந்த உயிலும் தனபாக்கியம்மாள் எழுதவில்லை என்றால் சரிதான். தனபாக்கியம்மாள் 27.05.2018 ல் இறந்தார். தனபாக்கியம்மாளுக்கு கையெழுத்து போட தெரியுமா என்றால் கையெழுத்து போடுவதை பார்த்திருக்கிறேன், ஆனால் அவர்களுக்கு எழுத படிக்க தெரியாது.

3வது பிரதிவாதியின் பதிலுரையில் இறந்துபோன தனபாக்கியம்மாள் 3வது பிரதிவாதியின் பெயரில் 16.07.2010 ல் தாவா சொத்துக்கள் அனைத்தும் உயில் மூலம் எழுதி வைத்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அனைத்தும் பொய் என்று சொன்னால் சரிதான். உயிலே எழுதவில்லை. உயில் என்றால் என்ன என்று தெரியாது.

தனபாக்கியம்மாள் என்பவர் பெயரில் பெயரளவிற்கு தான் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றாலும் அந்த சொத்துக்களை எந்தவிதத்திலும் பாராதினம் செய்ய எந்த வித உரிமையும் இல்லை என்று

சொன்னால் சரிதான். 1 மற்றும் 2 வது பிரதிவாதிகள் ஆகியோர்களுக்கு தாவா சொத்துக்களில் தலா 1/4 பங்கு உள்ளது என்றால் சரியல்ல. நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ளது போல் தாவா சொத்துக்களை 3 ஆக பிரிக்க கேட்பது சட்டப்படி செல்லாது என்றாலும் சொத்தை 4 பங்காக தான் பிரிக்க வேண்டும் என்றாலும் அதன் படி நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்து என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 03.15 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.10.16 18:53:54 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.